[2005 மார்ச் 29

வினா எண் 227, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

227—

பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்

***41932—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், தேசிய பால் வள வாரியத்தில் பெற்றுள்ள கடன் எவ்வளவு?

(ஆ) அது இலாபத்தில் இயங்குகிறதா?

(இ) நட்டத்தில் இயங்கினால், அதனை ஈடுகட்ட எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், தேசிய பால் வள வாரியத்திடமிருந்து பெற்றுள்ள கடன் தொகை ரூ. 110,70,000/-. (ஆ) மற்றும் (இ) இந்த ஒன்றியம் இலாபத்தில் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வினா எண் 228, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

228—

சுற்றுலா மையம்

***36035—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—